# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை–600 032.
தொலைபேசி: 044–22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை – 600 032.
**முன்னிலை: முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ)**

**முறையீட்டு மனு (மு.மு) எண்.1706/ஊராட்சி /2018**
**ஆணை நாள்: 19.12.2018**

திரு. எம். ராதாகிருஷ்ணன்,
சித்தனஅள்ளி கிராமம்,
தருமபுரி மாவட்டம். - மனுதாரர்

வட்டார வளர்ச்சி அலுவலர்,
பென்னாகரம் ஊராட்சி ஒன்றியம். - எதிர்மனுதாரர்

## ஆணை

தருமபுரி மாவட்டம், பென்னாகரம் ஊராட்சி ஒன்றியம், சித்தனஅள்ளி கிராமத்தில் வசிக்கும் திரு. எம். ராதாகிருஷ்ணன், அவருடைய 12.12.2018 நாளிட்ட மனுவில், பென்னாகரம் ஊராட்சி ஒன்றியம், வட்டுவனஅள்ளி ஊராட்சிக்குட்பட்ட மருக்காரம்பட்டி கிராமத்தில் திரு. கிருஷ்ணன் த/பெ. காவேரி என்பவர் 1999 ஆம் ஆண்டு முதல் OHT இயக்குநராக பணிபுரிந்து வருகிறார் என்றும், 09/15 வரை ஊதியம் ரூ.2,450/- பெற்றுள்ளார் என்றும், தற்போது வரை ஊதியம் வழங்காமல் நிலுவையில் உள்ளது என்றும் தெரிவித்து அதன் விபரம் பொது தகவல் அலுவலரிடம் கோரப்பட்டதற்கு, பொது தகவல் அலுவலர் மற்றும் துணை வட்டார வளர்ச்சி அலுவலர் (பொது) பென்னாகரம் அவர்கள் மேற்படி நபருக்கு பணி செய்த காலமான 1999 முதல் 12/15 வரை ஊதியத் தொகை வழங்கப்பட்டுள்ளது என்றும், பணி செய்த காலங்களில் வழங்க வேண்டிய ஊதியம் எதுவும் நிலுவையில் இல்லை என்றும், திரு. கிருஷ்ணன் 1/15 முதல் சரியாக பொது மக்களுக்கு குடிநீர் வழங்காமல் வெளியூர், வெளிமாநிலத்திற்கு மேஸ்திரி வேலைக்கு சென்று விட்டார் என்றும்

பொய்யான தகவல் அளித்துள்ளார் எனத் தெரிவித்து, அன்னாரின் மீது தக்க நடவடிக்கை மேற்கொள்ள கேட்டுக் கொண்டுள்ளார்.

2014 ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் சட்டம், பிரிவு 2, உட்பிரிவு 7ன்படி 'உள்ளாட்சி அமைப்பு' என்பதற்கான பொருளில் "ஊராட்சி மன்றம்" மற்றும் "ஊராட்சி ஒன்றியம்" என்ற அமைப்புகள்வரையறுக்கப்படவில்லை. எனவே, மனுதாரர் மனு மீது இம்முறைமன்ற நடுவத்தால் எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ள இயலாத நிலை உள்ளது. எனவே இம்மனுவினை மாவட்ட ஆட்சித் தலைவர், தருமபுரி மாவட்டம் அவர்களுக்கு தக்க நடவடிக்கைக்காக மேலனுப்பலாம் என முடிவு செய்யப்பட்டு, அவ்வாறே அனுப்பப்படுகிறது. மேலும், இப்பொருள் குறித்து தருமபுரி மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களை அணுகுமாறு மனுதாரருக்கு அறிவுறுத்தி ஆணையிடப்படுகிறது.

2018 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 19 ஆம் நாளன்று என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையுடன் இவ்வாணையிடப்படுகிறது.

--//ஒப்பம்//--

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

செயலாலருக்காக.

பெறுநர்:

திரு. எம். ராதாகிருஷ்ணன்,
சித்தனஅள்ளி கிராமம்,
கிட்டன ஹள்ளி அஞ்சல்,
பென்னாகரம், தருமபுரி மாவட்டம் - 636 809.

நகல்:

1. மாவட்ட ஆட்சித்தலைவர்,
   தருமபுரி மாவட்டம்,
   தருமபுரி - (இணைப்புகளுடன்).
2. மாண்புமிகு முறைமன்ற நடுவர் அவர்களின் நேர்முக எழுத்தர்.
3. செயலாளர் அவர்களின் நேர்முக எழுத்தர்.
4. ஊராட்சி உதவி பிரிவு அலுவலர்.